***[17.09.2021 அன்று நடைபெற்ற சரக்கு மற்றும் சேவை வரிகள் மன்றத்தின் 45வது கூட்டதில் மாண்புமிகு நிதி & மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் அவர்கள் சமர்பித்த அறிக்கை]***

***மரியாதைக்குரிய மாண்புமிகு ஒன்றிய நிதியமைச்சர் & GST மன்றத்தின் தலைவர் அவர்களே,***

***GST மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்களே,***

***மற்ற சிறப்பு விருந்தினர்களே,***

***வணக்கம்!***

***மரியாதைக்குரிய தலைவர் அவர்களே***

*ஓராண்டுக்கும் மேலான காலத்துக்கு பின்னர் நேரில் நடைபெறும் முதல் கூட்டத்தில் தமிழ்நாட்டின் கருத்துக்களை இந்த மாமன்றத்தில் முன்வைக்க என்னை அழைத்தமைக்கு என் நன்றியினை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். கூட்டத்தின் தேதியை தெரிவிக்கும் அழைப்பிதழ் கிடைக்கும் முன்னரே அளித்த தவிர்க்க முடியாத வாக்குறுதிகள் & சமீபத்தில் நிறைவடைந்த தமிழ்நாடு சட்டபேரவை பட்ஜெட் கூட்டதொடர் காரணமாக பல வாரங்களாக நிலுவையில் இருந்த தொகுதி பணிகளின் பொருட்டு இந்த கூட்டத்தில் என்னால் நேரில் பங்கேற்க இயலாத சூழல். மற்ற மாநில பிரதிநிதிகளை சந்திக்க கிடைக்கும் இந்த நல்வாய்ப்பை தவறவிட்டது குறித்து நான் வருத்தம் அடைந்த போதும், அடுத்த நிகழ்வு வெகு தொலைவில் இருக்காது என்று நம்புகிறேன். நேரடியாக பங்கு பெற இயலாத காரணத்தால் மாண்புமிகு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அரசு முன்வைக்கும் கருத்துக்களை இந்த ஆவணம் மூலமாக சமர்பிக்கிறோம்.*

*கூட்ட அலுவலில் உள்ள பதினெட்டு விஷயங்கள் குறித்து உரையாற்றும் முன்*

இரு நீண்ட கால பிரச்சினைகளை மாமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வர விரும்புகிறேன். முதல் பிரச்சினை – சிறிய அளவில் வரி செலுத்துவோர் மீது ஜிஎஸ்டிக்கு இணங்கும் சுமை சமமற்ற வகையில் ஏறியுள்ளது. இதற்கு தெளிவற்ற தன்மையும் போதிய தொழில்நுட்பம் இல்லாததும் தான் காரணம். என் கலந்துரையாடல்களின் போது, ஜிஎஸ்டி வரி செலுத்துவோர், குறிப்பாக சிறு வர்த்தகர்கள், தங்கள் பயனர் கணக்குகளை பயன்படுத்துவதில் உள்ள சிரமத்தை தொடர்ந்து வெளிப்படுத்தினர். GSTN தளத்தில் அனைத்து உள்ளடக்கமும் ஆங்கிலத்தில் மட்டுமே இருப்பதே அதற்கு காரணம். இதன் விளைவாக, சிறு வணிகர்கள் "வரி ஆலோசகர்களின்" சேவைகளை பெற வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இது அவர்களின் செலவை அதிகரிப்பதோடு அவர்களின் வரிக் கணக்குகளை சம்ர்பிப்பதில் முழு கட்டுப்பாடு இல்லாத நிலையும் ஏற்படுகிறது. தமிழ்நாடு வணிகத்திற்கு உகந்த மாநிலமாக உள்ளது, பெரிய & சிறு குறு வணிகர்கள் என அனைவருக்கும் ஆதரவான சூழலை வழங்க விரும்பும் மாநிலம் தமிழ்நாடு. GST அமல்படுத்தப்பட்டு நான்கு ஆண்டுகள் கடந்த நிலையிலும் சேவைகளை தமிழ் மொழியில் வழங்க எந்த கணிசமான முயற்சிகளும் எடுக்கப்படவில்லை. ஜிஎஸ்டி தொடர்பான சேவைகளை தமிழ் வழியில் வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்ற உத்தரவாதத்தை எங்கள் அரசு சட்டமன்றத்தில் அறிவித்துள்ளது. எனவே, சேவைகளை தமிழில் விரைவாக வழங்க GSTNக்கு உத்தரவிடுமாறு இந்த மாமன்றத்தை நாங்கள் வலியுறுத்துகிறோம். படிவங்களையும் & தளம் சார்ந்த விவரங்களையும் மொழிபெயர்க்க உதவுவதாக ஏற்கனவே GSTN இடம் அறிவித்துள்ளோம். இவ்விஷயத்தில் நேர்மறையான ஒரு பதிலை GSTN இடம் இருந்து எதிர்பார்க்கிறோம்.

இந்த மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள், கணிசமான நிதி சுயாட்சியை மாநிலங்கள் கைவிட்டுவிட்டன என்பதை அறிவார்கள். அளவு & கட்டுப்பாடு என இரு வகையிலும் உரிமைகளை கைவிட்டு

*தயக்கத்துடன் GST முறையை அமல்படுத்த ஒப்புதல் வழங்கியுள்ளோம். மாநிலங்களின் கண்ணோட்டத்தில், GST வரையறையின் கீழ் நான்கு வருட அனுபவத்துக்கு பின்னர், விதிப்பு முறை & செலவுகள், மற்றும் ஜிஎஸ்டியை அறிமுகப்படுத்துவதன் நன்மைகளை மதிப்பாய்வு செய்ய இது சரியான நேரம் எனக் கருதுகிறோம்.*

.

*கோவிட் காரணமாக ஏற்பட்ட ஒட்டுமொத்த பேரழிவை கழித்துவிட்டு பார்த்தாலும், ஜிஎஸ்டியின் அறிமுகம் காரணமாக மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி அதிகமடையும் என்ற வாக்குறுதியும் அதன் விளைவாக வரிவிதிப்பு வருவாய் தொடர்ந்து வளரும் என்ற கூற்றும் இன்று வரை மெய்ப்படவில்லை.*

*இழப்பீடு குறித்து சட்டப்பூர்வமாக விதிமுறைகள் நிர்ணயிக்கப்பட்ட காரணத்தால் எதிர்மறை விளைவுகள் ஓரளவுக்கு குறைக்கப்பட்டுள்ளன. இந்த செயல்முறை தனித்துவமான ஆபத்தை எதிர்கொள்ள வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும் (நாட்டின் பொருளாதாரத்தை மீறி ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்கள் பாதிக்கப்படுகின்றன). கட்டமைப்பு கோளாறுகளை (தொற்று நோய் காரணமாகவும், விரைவாக அமல்படுத்திய முழுமையான ஊரடங்கின் காரணமாகவும் நாட்டின் பொருளாதாரம் ஒட்டுமொத்தமாக 2020ம்நிதியாண்டின் முதல் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 25% க்கும் அதிகமாக சுருங்கியது) சமாளிக்கும் வண்ணம் எந்த ஏற்பாடோ அல்லது திட்டமோ இல்லை. இழப்பீடு சார்ந்த சட்ட ஏற்பாடுகள் பல விதங்களில் "விளக்கப்படுகிறது" என்பது மற்றொரு விஷயம். விளக்கங்கள் ஒவ்வொன்றும் மாநிலங்களுக்கு இழப்பை ஏற்படுத்தும் வகையில் உள்ளன, சட்டத்தின் ஒரு ஒருங்கிணைந்த பாகம்,"உண்மையான நோக்கம்" குறித்து நடந்த சர்ச்சைக்குரிய விவாதங்களுக்கு பின்னர் இறுதியாக எட்டப்பட்ட "தீர்வு" என்பதையும் கவனிக்க வேண்டும். மறுபுறம், நிதி தன்னாட்சி & கட்டுப்பாடு ஆகியவை கைவிட்டு*

போனதால் மாநிலங்களுக்கு ஏற்பட்டுள்ள கட்டமைப்பு செலவுகள், எதிர்பார்த்ததை விடவும் அதிகமாக உள்ளன. செயல்முறையில் உள்ள கோளாறுகளும், அமல்படுத்துவதில் உள்ள பிழைகளும் இந்த செலவுகளை மேலும் அதிகரிக்க செய்கின்றன. இவை அனைத்தையும் கருத்தில் கொள்ளும் போது, பலன்களை விட செலவுகளே அதிகமாக உள்ளது. எனவே, வரிவிதிப்பு வழிமுறைகள் குறித்தும், அதன் மூலமாக நேரடி & மறைமுக வரிவிதிப்பு அகியவற்றை முழுமையாக மாற்றியமைக்கவும் அடிப்படையாக மறுபரிசீலனை செய்வதே தற்போதைய உடனடி தேவை என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். எங்கள் பங்கிற்கு, சிறந்த பொருளாதார வல்லுநர்கள், சட்ட வல்லுநர்கள் மற்றும் அறிஞர்கள், ஆகியோர் அடங்கிய ஒரு சிறப்பு குழுவை நிறுவும் பணியில் தமிழக அரசு உள்ளது. இவர்களின் உதவியுடன் ஒன்றியத்துக்கும் மாநிலங்களுக்கும் இடையே பகிரப்பட்ட நிதி அதிகாரங்கள் குறித்து புரிந்து கொண்டு, சமூக ஒப்பந்தம் குறித்த எங்கள் நிலைபாட்டை அறிய முற்படுகிறோம்.

இந்த அடிப்படை பிரச்சினைகள் குறித்த கருத்துக்களை தெரிவித்த நிலையில்,
கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்றுள்ள பொருட்கள் குறித்த பதில்களை தெரிவிக்க முற்படுகிறேன்:

1) தவிர்க்கிறோம். GST சட்டம் நிறைவேறி 4 ஆண்டுகள் கடந்த நிலையில், எந்த முடிவுகள் "தகவல்கள்", எவை "ஒப்புதலுக்கு" எவற்றின் மீது இந்த மாமன்றதின் உறுப்பினர்கள் விவாதிக்கவும், முடிவெடுக்கவும் வேண்டும் என்பது குறித்து 100% தெளிவு இல்லை.

2) தவிர்க்கிறோம். மேலே உள்ள காரணம்.

3) IGST இழப்பீட்டு பாதையை தேர்ந்தெடுக்க சில குறிப்பிட்ட ஏற்றுமதியாளர்களை மட்டுமே அனுமதிக்கும் வகையில் சட்டக்

*குழுவால் பரிந்துரைக்கப்பட்ட 3(xv) முன்மொழிவு உள்ளது. தற்போது, கிட்டத்தட்ட 70,000 ஏற்றுமதியாளர்கள் IGST வழியாக இழப்பீடு பெற்று வருகின்றனர். முன்மொழிவு ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில், இது சுமார் 10,000 ஏற்றுமதியாளர்களாக குறைக்கப்படும். இது நிச்சயமாக ஏற்றுமதி நடவடிக்கையை மோசமாக பாதிக்கும். வர்த்தகர்களுக்கு பணத்தைத் திரும்பப் பெறுவதற்கான சாத்தியங்களை குறைப்பதே இந்த மாற்றத்தின் நோக்கம். ஜிஎஸ்டி சட்டத்தில் இயற்றப்பட்ட சமீபத்திய திருத்தங்கள், இரண்டு குறிப்பிடத்தக்க மாற்றங்கள் காரணமாக வர்த்தக நடவடிக்கைகள் மேலும் இறுக்கமடைந்து உள்ளன என்பதை இந்த மாமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். முதல் மாற்றம், GSTR1 பயன்படுத்தி வரி வரவுகளை முன்னோக்கி நகர்த்தும் வழிமுறையை அனுமதிக்க கூடாது. அதற்கு விலக்காக இருப்பது, இரு மாதங்களுக்கு முன்பே GSTR3B மூலமாக வரியை செலுத்தும் முறை. இந்த நிகழ்வின் அலுவலில், இது ஒரு மாதமாக குறைக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது. வரிகள் செலுத்த தவறுவதோடு, வர்த்தக சங்கலியில், ITC வரவுகள் உருவாகுவதையும் இது தடுக்கும். இரண்டாவது குறிப்பிடத்தக்க மாற்றமானது, வரவுகளை GSTR1 மூலமாக பரிமாற்றம் செய்யப்படாவிட்டால் ITCயை பயன்படுத்த முடியாது. தவறான இழப்பீடுகளை பெறுவதை தடுக்க இந்த இரண்டு திட்டங்கள் போதுமானவை என்று நாங்கள் நம்புகிறோம். IGST இழப்பீட்டு பாதையை தடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அது அதிக எண்ணிக்கையிலான ஏற்றுமதியாளர்களை பாதிக்கும். சட்டக் குழு பரிந்துரைத்த பிற அலுவல் பொருட்களை பொறுத்தவரை, பிற மாண்புமிகு உறுப்பினர்களின் ஒருமித்த கருத்துக்கு விட்டுவிடுகிறோம்.*

*4) தற்போதுள்ள விதிமுறைகளை பின்பற்றுவது குறித்த பரிந்துரைகள் மீது எந்த ஆட்சேபனையும் இல்லை.*

*5) கருத்தில் எடுத்துக்கொள்ளபடுகிறது. எந்த முடிவும் கோரப்படவில்லை.*

*6) இணைப்பு – IV குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களின் சார்பில் சிறப்பு நன்றி தெரிவிக்கப்பட்டு, கருத்தில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. இதற்கு ஆதரவாக அவர் கடிதம் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.*

*7) இந்த பரிந்துரைகளை அடைய மாண்புமிகு உறுப்பினர்கள் முன்னெடுத்த முயற்சிகளுக்கு நன்றி. சிக்கிம் மாநிலத்தின் கோரிக்கைகளை ஏற்கும் வகையில் GoM பரிந்துரைக்கும் முடிவுகளுக்கு ஆதரவு. மற்ற மாநிலங்களின் எதிர்கால கோரிக்கைகளுக்கு இம்முடிவு ஒரு முன்னுதாரணமாக கருதப்பட வேண்டும்.*

*8) GoMல் மாண்புமிகு உறுப்பினர்களின் முன்னெடுத்த முயற்சிகளுக்கு நன்றி தெரிவித்து கருத்தில் எடுத்துக்கொள்ளப்படுகிறது.*

*9) மாண்புமிகு உறுப்பினர்களின் முயற்சிகளுக்கு நன்றி, GoMன் பதவிக்காலத்தை 3 மாத கால நீட்டிப்பதற்கு ஆதரவு.*

*10) குறிப்பிடப்பட்டபடி தரப்படுத்தப்பட்ட எண்முறைமையை விரைவாக செயல்படுத்த ஆதரவு.*

*11) மனித நுகர்வுக்கான மதுபான உற்பத்தியில் ஈடுபடும் ஒப்பந்த உற்பத்தியாளர்கள், பிராண்ட் உரிமையாளர்களுக்கு வழங்கும் பணி சேவைகள் மீது 18% உயர் வரிவிகிதத்தை வசூலிக்கும் பரிந்துரையை கடுமையாக எதிர்க்கிறோம். அதிக வரிவிகிதத்தில் வசூலிக்கும் முடிவை தமிழ்நாடு தொடர்ந்து எதிர்த்து வருகிறது. மனித நுகர்வு சார்ந்த மதுபானங்களின் மீது வரி விதிக்க மாநிலங்களுக்கு உரிமை உண்டு. பரிந்துரைக்கப்படும் வரி உயர்வு மதுபானங்கள் மீது மாநிலங்கள் வசம் உள்ள நிதி உரிமையை முடிவுக்கு கொண்டு வந்து அதன் மூலம் பலதரபட்ட வரிகளை விதித்து ஈட்டும் வருவாயை இல்லாமல் செய்துவிடும்.*

*மேலும், வரி விகிதத்தில் பரிந்துரைக்கப்பட்ட மாற்றம் உற்பத்தியாளருக்கு செலவை அதிகரிக்கும், அது நுகர்வோர் மீது*

*திணிக்கப்படும். எனவே, மனித நுகர்வுக்கான மதுபானங்களை தயாரிக்கும் ஒப்பந்த உற்பத்தியாளர்கள், பிராண்ட் உரிமையாளர்களுக்கு வழங்கும் பணி சேவைகள் மீது விதிக்கப்படும் வரிகளை உண்மையில் விலக்க வேண்டும் அல்லது தற்போது நடைமுறையில் உள்ள 5% என்ற அளவில் அது தொடர வேண்டும். உணவுப்பொருளாக அதை நிர்ணயிக்க முடியாத பட்சத்தில், அதற்க்கென தனி உள்ளீடு உருவாக்கப்பட வேண்டும்.*

*12) இந்திய அரசியலமைப்பு மூலமாக மாநிலங்களுக்கு வழங்கப்பட்ட சிறு அளவிலான உரிமைகளில் பெரும்பாலானவற்றை GSTயின் அறிமுகத்துக்கு பின்னர் நாங்கள் இழந்த நிலையில், பெட்ரோல் & டீசல் மீது மாநிலங்கள் விதிக்கும் வரிகள், அதன் மூலம் கிடைக்கும் வருவாய், அதை நிர்வகிக்கும் உரிமை ஆகியவை மாநிலங்களிடம் எஞ்சியுள்ள சில உரிமைகள் என்பதே எங்கள் பொதுவான எண்ணம். எஞ்சியுள்ள வெகு சில உரிமைகளையும் விட்டுக்கொடுக்க எங்களுக்கு விருப்பமில்லை என்ற காரணத்தால் இந்த பொருட்களை GSTயின் கீழ் கொண்டு வரும் முடிவை நாங்கள் எதிர்க்கிறோம். மேலும், பின்வரும் காரணங்கள் எங்கள் சந்தேகங்களை பல மடங்கு அதிகரிக்கின்றன*

- *2014ம் ஆண்டு தொடங்கி இன்று வரை, ஒன்றிய அரசு பெட்ரோல் & டீசல் மீது விதிக்கும் வரியின் அளவை **500% முதல் 1000%** வரை உயர்த்தியுள்ளது*
- *2014ம் ஆண்டு விதிக்கபட்ட ஒன்றிய வரியில் கலால் 90% (நிதிக்குழுவின் பரிந்துரை படி மாநிலங்களுக்கு பிரித்து அளிக்க வேண்டிய பங்கு) என்றும் செஸ் 10% (மாநிலங்களுக்கு பிரித்து அளிக்க வேண்டியதில்லை) என்ற அளவிலும் இருந்தது, இந்த வரிகளின் நிலையானது தற்போது கலால் 4% என்றும் செஸ் 96% **(இதில் ஒரு பைசா கூட மாநிலங்களுக்கு பிரித்து அளிக்கப்படுவதில்லை)** என்ற அபரிதமான அளவிலும் உள்ளன.*

*இந்த செயல்பாடுகள் காரணமாக மாநிலங்கள் பெருமளவிலான வருவாய் இழப்பை சந்தித்துள்ளன. அதே வேளையில் பெட்ரோல் & டீசல் மீது விதிக்கப்படும் வரிகள் காரணமாக ஒன்றிய அரசின் வருவாய் ஆண்டுக்கு பல லட்சம் கோடிகள் என்ற அளவுக்கு உயர்ந்துள்ளது.*

*இதுபோன்ற நிலையில் பெட்ரோல் & டீசல் மீதான வரி உரிமைகளை மாநிலங்கள் வசமிடம் இருந்து முழுமையாக பறித்து அவற்றை GSTயின் கீழ் கொண்டு வரும் திட்டம் மிகவும் அபாயகரமான, அழிவை ஏற்படுத்தும் அநீதியாக இருக்கும்.*

*இருந்த போதும், பெட்ரோல் & டீசல் மீதான செஸ் வரிகளை முற்றிலுமாக கைவிட ஒன்றிய அரசு முன்வரும் பட்சத்தில், எங்கள் நிலை குறித்து மறுபரிசீலனை செய்ய தயாராக உள்ளோம்.*

*மாநிலங்களுக்கும் ஒன்றிய அரசுக்கும் இடையிலான ஒட்டுமொத்த பரிமாற்றங்களை கருத்தில் கொண்டு, மாநிலங்களின் நிதி உரிமைகளை மீட்கும் வழிமுறையை கண்டறியாமல், தனியொரு விஷயமாக இதை கருத்தில் கொள்ள முடியாது.*

*13) குறைந்த அல்லது பூஜ்ய அளவிலான வரிகளை நாங்கள் பல பொருட்களுக்கு கோரியிருந்த போதும், டிசம்பர் 31 வரை அனைவரும் ஏற்றுக்கொண்ட வரி அமைப்பு நீடிக்கவே விரும்புகிறோம்.*

*14) கூட்டம் குறித்த குறிப்பில் இடம்பெற்றுள்ள மற்ற பொருட்கள் குறித்த எங்கள் நிலைபாட்டை தெரிவிப்பதை தவிர்க்கும் அதே வேளையில், ஒரு முக்கிய விதிவிலக்கு. அலுவல் இணைப்பு-1ல் உள்ள பொருள் 8ன் மீதான பரிந்துரையை கடுமையாக எதிர்க்கின்றோம், அதை நான் வார்த்தை மாறாமல் மேற்கோள் காட்டுகிறேன் (மிகவும் ஆட்சேபனைக்குரிய வார்த்தைகளை முன்னிலைபடுத்தி உள்ளேன்):*

"Accordingly, the Fitment Committee recommends, keeping in mind the general consumer usage pattern of such products, that

i) Coconut oil, when packed and sold in a unit container of less than 1000 millilitre may be classified as Hair Oil (under Chapter 33), attracting a GST rate of 18% irrespective of its actual end use

ii) The edible coconut oil, when packed and sold in a unit container of 1000 millilitre or above be subject to GST at the rate of 5%

*இந்த முடிவு தவறான நோக்கத்துடன் எடுக்கப்பட்டது என்பதே எங்கள் கருத்து, இந்த முடிவில் நியாயமோ அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய தர்க்கமோ இல்லை. உண்மையை சொல்ல வேண்டும் எனில், இந்த முடிவு தேங்காய் & தேங்காய் எண்ணையை அதிகமாக உற்பத்தி செய்யும் மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாட்டின் நலனுக்கு எதிராக உள்ளது. மேலும், கேரளா, ஆந்திரா, தெலுங்கானா & கர்நாடகா ஆகிய தென்னக மாநிலங்களின் நலனுக்கு விரோதமாக உள்ளது. உண்ண தகுந்தது அல்லது உண்ணத் தகுதியற்றது என்பதை GST வசூலிக்கும் பொருட்டு, எப்படி தெளிவாக எதன் அடிப்படையில் வகைப்படுத்த முடியும். உணவுக்கு தான் பயன்படுகிறதா என்பதையும் 1000 மில்லி லிட்டர் (1 முழு லிட்டர்) தான் மேல் அளவு எனவும் எப்படி முடிவு செய்கிறீர்கள்? மனிதாபிமானம் இல்லாத, அடிப்படை தர்க்கம் அற்ற ஒரு தன்னிச்சையான முடிவு. எத்தனை ஏழைக் குடும்பங்கள் 1 லிட்டருக்கும் அதிகமான அளவில் தங்கள் சமையல் எண்ணெயை வாங்க முடியும்? வெகு சில. தென் மாநிலங்களில் எத்தனை குடும்பங்கள் தேங்காய் எண்ணெய் கொண்டு சமையல் செய்கின்றன? வெகு அதிகம். இந்த முடிவுக்கு தேங்காய் எண்ணெய் மட்டுமே ஏன் தனிமைப்படுத்தப்பட வேண்டும்?*

*பல பயன்பாடுகள் கொண்ட மற்ற சமையல் எண்ணெய்கள், உதாரணமாக கடுகு எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் போன்றவற்றை ஒப்பிடும் போது, அவை ஏன் கருத்தில் கொள்ளப்படவில்லை? பெரும்பாலும் அவை தமிழ்நாட்டை போன்ற தென் மாநிலங்களுக்கு மட்டுமே உட்பட்டு தயாரிக்கப்படுவதில்லை*

*என்பதாலா? பாமாயில் & ஒலிவ் எண்ணெய் போன்ற இறக்குமதி செய்யப்படும் எண்ணெய்கள் குறித்து, அவற்றுக்கு இறக்குமதி வரியை நீக்கிய அறிவார்ந்த ஒன்றிய அரசின் நிலைப்பாடு என்ன? தெனிந்தியா தயாரிக்கும் எண்ணெய் மீது ஏன் இந்த பாரபட்சம்? வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் எண்ணெய்கள் எந்த அளவில் இருந்தாலும் அதற்கு 5% என்பது ஏன்?*

*இவை அனைத்தையும் கருத்தில் கொண்டால், இந்த முன்மொழிவு ஏழைகளுக்கு (சிறிய அளவில் எண்ணெய் வாங்கும்) எதிரானது, தென் மாநிலங்களுக்கு (தேங்காய்கள் பெரும்பகுதி விளைவிக்கபடுகிறது) எதிரானது, இந்தியாவுக்கு (ஆலிவ் எண்ணெய் மற்றும் பாமாயில் போன்ற வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் எண்ணெய்களுக்கு முன்னுரிமை அளித்தல்) எதிரானது என்பதே எங்கள் பார்வை.*

*ஃபிட்மென்ட் குழுவில் இத்தகைய ஒரு முடிவுக்கு வழிவகுத்த சிந்தனை செயல்முறைக்கு எதிராக நாங்கள் கேள்வி எழுப்புகிறோம். இதன் மீது போதிய அளவில் சிந்தனை இல்லை என்று தெளிவாக தெரிகிறது. அல்லது ஒருவேளை மிகவும் மோசமான அளவில், இத்தகைய அப்பட்டமான பாகுபாடு ("உண்மையான இறுதி பயன்பாடு குறித்து கவனமில்லை") பல உண்ணக்கூடிய*

*எண்ணெய்களில் ஒன்றை மட்டும் விதிவிலக்காக கொள்வது, நீதிமன்றத்துக்கு செல்லும் பட்சத்தில் அடிப்படை அரசியலமைப்பு தேர்வில் நிச்சியம் தேர்ச்சி பெறாது.*

*முன்வைக்கப்பட்ட கூற்றுகள், தர்க்கங்கள் & நியாயங்கள் தாண்டி, ஏழைகளுக்கு எதிரான அளவைப் பொருத்து ("உண்மையான இறுதி பயன்பாடு குறித்து கவனமில்லை") நிர்ணயிக்கப்படும் GST வரிவிகிதத்தை இந்த மாமன்றம் நிர்ணயிக்கும் பட்சத்தில் அது எல்லா உண்ணக்கூடிய எண்ணெய்களுக்கும் , ஒரு குறிப்பிட்ட அளவில்*

(உதாரணமாக 100ml, 1000 ml அல்ல) பொருந்தும். நியாய தர்மம் குறித்த அடிப்படை கோட்பாடுகளின் படி, மற்ற இந்திய & வெளிநாட்டு எண்ணெய்களுக்கு 5% என நிர்ணயித்து, தென்னிந்தியாவை சேர்ந்த, ஒரு உள்நாட்டு எண்ணெய்க்கு 360% என்ற அளவிற்கு GST வரிவிதிப்பை உயர்த்தக் கூடாது.

இந்த மாபெரும் அநீதியை இந்த மாமன்றம் நிறைவேற்றும் பட்சத்தில், தமிழகத்தையும் மற்ற தென் மாநிலங்களையும் சேர்ந்த பல இலட்சக்கணக்கான தேங்காய் பயிர் செய்யும் விவசாயிகள் அதை மறக்கவோ, மன்னிக்கவோ மாட்டார்கள் என்பதை கூறி என் கருத்தை நிறைவு செய்கிறேன்.

15) தவிர்க்கிறோம். மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்தொற்றுமைக்கு விடப்படுகிறது.

16) தவிர்க்கிறோம். மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்தொற்றுமைக்கு விடப்படுகிறது.

17) கவனிக்கப்படுகிறது.

18) இழப்பீடு முறையை தொடர்வதற்க்கு பெரும்பான்மையாக உறுதியாக நாங்கள் ஆதரவு அளிக்கும் நேரத்தில், பல விவரங்கள் எங்களுக்கு கவலையை உண்டாக்குகின்றன. உதாரணமாக, நிகழ்ச்சி அலுவலில் குறிப்பிடப்பட்டுள்ள எண்களை மாண்புமிகு உறப்பினர்கள் சிலர் கேள்விக்கு உள்ளாகலாம். எது எப்படி ஆனாலும், சில முக்கிய பிரச்சினைகள் குறித்து, அலுவலில் தெரிவிக்கபட்டுள்ளது போல "ஜூன்-2022 க்குப் பிந்தைய நிலை, அன்றைய காலகட்டத்தில் உள்ள பற்றாக்குறையை ஈடுசெய்ய கருதக்கூடிய பரிந்துரைகள்" பின்னர் தான் தெளிவாகும். எனவே, தேவையான தகவல்கள் எங்களுக்கு கிடைக்கும்வரை எங்கள் உள்ளீடுகளை ஒத்திப்போடுகிறோம். 45வது கூட்டங்களில் வழங்கப்பட்ட பரிந்துரைகள் குறித்து ஆலோசிக்கவும், பகுப்பாய்வு செய்யவும், அம்சங்களை, விளைவுகளை மதிப்பிடவும்

*மாண்புமிகு உறுப்பினர்களுக்கு சிறிது கால அவகாசம் தேவைப்படும். எனவே, எந்த முடிவும் குறைந்தபட்சம் 46வது கூட்டத்திற்கு ஒத்திவைக்கப்படும் என்று எதிர்பார்க்கலாம். அதில் இருமடங்கு உறுதியாக இருக்க,இந்த முக்கிய விஷயத்தின் மீது கால அவகாசம் அளிக்காமல் எந்த ஒரு முடிவும் எடுக்கப்படக்கூடாது  என்ற கோரிக்கையை அதிகாரபூர்வமாக நாங்கள் முன்வைக்கிறோம். மேலும், இந்த விஷயத்தை பொறுத்தவரை மாமன்றதுக்கு வழங்கப்படும் தகவல்கள் அனைத்தும் கூட்டத்துக்கு பின்னர் எங்களுக்கு நேரடியாக வழங்க வேண்டும் என்று கோருகிறோம். அதன் மூலம் எங்களுக்கு இருக்கும் வாய்ப்புகளை மதிப்பிட்டு எங்கள் கருத்துக்களை தீர்மானிக்க முடியும்.*

***மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே,***
*இந்த மாமன்றத்தின் கூட்டத்தில் நேரடியாக கலந்து கொள்ள முடியாததற்காக நான் மீண்டும் வருத்தம் தெரிவிக்கிறேன். நான் முன்வைக்கும் இந்த எழுத்துபூர்வமான ஆவணத்தை எப்போதும் போல உரிய பரிசீலனையோடு ஏற்றுக்கொண்டமைக்கு நன்றி.*

***நன்றி.***

***வணக்கம்.***